பத்திரிக்கை செய்தி

காஞ்சிபுரம் மாவட்டம் – மகளிர் திட்ட அலுவலகம் – அனைத்து வட்டார இயக்க மேலாண்மை அலகில் உள்ள வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் (Block Coordinator) காலிப்பணியிடத்திற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்(TNSRLM) என்பது கிராமப்புற வறுமையை போக்கவும் மற்றும் கிராமப்புற ஏழைகளுக்கு நிலையான வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்கும் ஒரு முக்கிய திட்டமாகும். காஞ்சிபுரம் மாவட்டம், மாவட்ட இயக்க மேலாண்மை அலகு, மகளிர் திட்டம் அலுவலகம், வட்டார இயக்க மேலாண்மை அலகு. காஞ்சிபுரம்–2, குன்றத்தூர்–3. உத்திரமேரூர்–2. வாலாஜாபாத்–4. திருப்பெரும்புதூர்–3 ஆகிய வட்டாரங்களில் காலிப்பணியிடமாக உள்ள 14 வட்டார ஒருங்கிணைப்பாளர்கள்(BC) பணியிடங்களுக்கு கீழ்கண்ட விவரங்கள் அடிப்படையில் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் கல்வித்தகுதி விவரம்

1.	கல்வித் தகுதி	ஏதாவது ஒரு பாடத்தில் பட்டப்படிப்பு படித்திருக்க வேண்டும் மற்றும் குறைந்தது 3 மாத MS Office கணினி பயிற்சி சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். அல்லது கணினி அறிவியல் (Computer Science) / கணினி பயன்பாடுகள் (Computer Applications) துறையில் பட்டம் பெற்றிருத்தல்.
2.	வயது	35 வயதிற்குள் இருக்க வேண்டும்.
3.	அனுபவம்	SHG/PLF–ல் குறைந்தது 5 ஆண்டுகள் முன்னனுபவம் இருக்க வேண்டும்.
4.	வசிப்பிடம்	சம்மந்தப்பட்ட வட்டாரத்தை இருப்பிடமாக கொண்டு இருக்க வேண்டும்.
5.	நிபந்தனைகள்	• இரு சகக்ர வாகன ஓடுநர் உரிமம் வைத்திருக்க வேண்டும் • நன்னடத்தை சான்று சமர்ப்பிக்க வேண்டும் • முன்னர் TNSRLM / புதுவாழ்வு திட்டம் / IFAD திட்டம் அல்லது பிற மாநில அரசுத் திட்டங்கள் / திட்டங்கள் / மிஷன்களில் நிர்வாக அல்லது நிதி முறைகேடுகள் உள்ளிட்ட காரணங்களால் பணிநீக்கம் / நீக்கம் செய்யப்பட்டவராக இருக்கக்கூடாது.

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய கடைசி நாள்.07.08.2026.

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி – இணை இயக்குநர்/திட்ட இயக்குநர்
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
மாவட்ட இயக்க மேலாண்மை அலகு
மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்
காஞ்சிபுரம் மாவட்டம்–631 502
(or) dpiu_kpm@yahoo.com

எனவே, காஞ்சிபுரம் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், மாவட்ட இயக்க மேலாண்மை அலகு, (மகளிர் திட்டம்) அலுவலகம், வட்டார இயக்க மேலாண்மை அலகு. காஞ்சிபுரம்–2, குன்றத்தூர்–3. உத்திரமேரூர்–2. வாலாஜாபாத்–4. திருப்பெரும்புதூர்–3 ஆகிய வட்டாரங்களில் ஒப்பந்த அடிப்படையில் காலிப்பணியிடமாக உள்ள 14 வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் பணியிடத்திற்கு தகுதியுள்ள பெண் விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்களை 07.08.2026–க்குள் அனுப்பி பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் தெரிவிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சித்தலைவர்
காஞ்சிபுரம்

24/7/26